# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 16 வெள்ளிக்கிழமை (30.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 101



RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து


## முல்லைத்தீவுக் கடற்பரப்பில் புலிகளின் படகுகள் மூழ்கடிப்பு

### தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் கடற்புலிகளின் மூன்று ஆயுதப் படகுகளை தாக்கி அழித்துள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் செய்தி வெளியிட்டுள்ளது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் 23 டோராக்கள் கடற்புலிகளால் விரட்டியடிப்பு!

### தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு கடற்பரப்பில் 23 டோராக்களைக் கொண்ட அணியை கடற் புலிகள் தாக்கி கடற்படையினருக்கு இழப்புக்களை ஏற்படுத்தி விரட்டியடித்துள்ளனர். இதில் கடற்படையினரின் இரு டோரா பீரங்கிப் படகுகள் கடுமையாக சேதமடைந்துள்ளன என விடு தலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

## பழைய முருகண்டியில் கிளைமோர்த் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பழைய முருகண்டி வீதியில் இராணுவ ஆழ ஊடுருவி தாக்கும் அணியினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இத் தாக்குதல் நேற்றுப் பகல் 12 மணிக்கு இடம் பெற்றுள் (08 ஆம் பக்கம் பார்க்க)

## விமான உதிரிப்பாகங்கள் பலத்தவனவில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வாத்துவ கோரஸ்துவ பலத்தவன வீதியிலுள்ள வீடு ஒன்றில் இருந்து மிக இலகுரக விமானங்களுக்குப் பொருத்தும் இரண்டு பாகங்களை பொலிஸார் மீட்டுள்ளனர். விமானப்படையில் இருந்து ஓய்வு பெற்றவிமானி ஒருவரின் வீட்டில் இருந்து இவ் விமான உதிரிப்பாகங்கள் வாத்துவ பொலிஸாரால் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த உதிரிப்பாகங்களை சட்ட ரீதியான விமான நிறுவனம் மற்றும் உரிய நிறுவனங்களின் எழுத்து மூல அனுமதியுடன் தமது வீட்டில் வைத்துக்கொண்டதாக முன்னாள் விமானி பொலிஸாரிடம் (08 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலை 7ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பெற்றோலின் விலையை அதிகரிக்க இலங்கை பெற்றோலிய கூட்டுஸ்தாபனமும் ஐஓசி லங்கா நிறுவனமும் தீர்மானித்துள்ளது. ஒக்ரன் 90 ரக பெற்றோலின் விலை லீற்றர் ஒன்றுக்கு 7 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக்கழக ஏற்பாட்டில் கிளிநொச்சியில் கண்டனப் பேரணி

(கிளிநொச்சி)

ஆழ ஊடுருவும் அணி மனிதநேயப் பணியாளர்கள் மீது நடாத்திவரும் தாக்குதலைக் கண்டித்து கிளிநொச்சியில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஏற்பாட்டில் முற்பகல், 10 மணிக்கு கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவகப் பணியக முன்பிருந்து ஆரம்பித்த பேரணி பிரதான வீதி வழியாக நகர்ந்து கிளிநொச்சி அரச செயலகத்தைச் சென்றடைந்தது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தலைவர் வே.சிவனடியார் தலைமையில் கண்டனக் கூட்டம் இடம் (08 ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டிலிருந்த கணவனும் மனைவியும் ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை

### உரும்பிராயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மூன்று கோவில் வீதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வீட்டுக்குள் நுழைந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் கணவனும் மனைவியும் கொல்லப்பட்டனர்.

சம்பவத்தில் வர்த்தகரான வைரமுத்து சிவகணேசநாதன் (வயது 59) மனைவி சரோஜினி (வயது 53) என்ற தம்பதிகளே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். குறித்த இருவர் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு வீட்டிலிருந்த நகைகள் மற்றும் (08 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை கடற்படை தாக்குதல் தமிழக மீனவர்கள் நால்வர் பலி

(கொழும்பு)

இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் கடலில் மீன்பிடித் தொழில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் நால்வர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். இச் சம்பவம் நேற்று மதியம் அளவில் இடம் பெற்றதாக இராமேஸ்வரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கன்னியாகுமாரி மாவட்டம் சின்னத்துரை கிராமத்தைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் கடலில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது அப் பகுதிக்கு வந்த கடற்படையினர் எதுவித முன்னெச்சரிக்கையோ அறிவிப்பையோ விடுக்காது திடீரென கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூட்டினை (08 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் ஆட்கடத்தல் தொடர்ந்து இடம்பெறுகிறது

### கியூமன் றைஸ் வோர்ஜ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் ஆட்கடத்தல் கொலை என்பன தொடர்ந்தும் இடம்பெறுவதாக கியூமன் ரைற்ஸ் வோர்ஜ் என்ற மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதல் 750 பேர் காணாமல் போயிருப்பதாகவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளும் கருணா தரப்பினரும் தொடந்தும் சிறுவர்களை படையில் சேர்த்துவருவதாகவும் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது. கருணா தரப்பினர் சிறுவர்களை படையில் சேர்த்துக்கொள்வதை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் அவ் அமைப்பு குற்றஞ்சுமத்தியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டிருக்கும் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா கருணா தரப்பு மாத்திரமல்ல வேறு எவருக்கும் சிறுவர்களை படையில் சேர்க்க அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை என கூறியிருக்கின்றார். (ச-3)

## இலங்கைத் தமிழ் மக்கள் விவகாரம் தமிழக சட்டப்பேரவையில் அமளி

(கொழும்பு)

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தமிழக சட்ட பேரவையில் ம.தி.மு.க. காங்கிரஸ் உறுப்பினர்களிடையே நேற்று காரசார விவாதம் நடைபெற்றது. இதனால் அவையில் கடும் அமளி ஏற்பட்டதைத் தொடந்து அமளியில் ஈடுபட்ட உறுப்பினர்களை சபாநாயகர் எச்சரித்தார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் பேசிய ம.தி.மு.க. உறுப்பினர் வீர இளவரசன் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து குறிப்பிட்டார்.அப்போது காங்கிரஸ் உறுப்பினர் சுதர்சனும் போளூர் வரதனும் ம.தி.மு.க. உறுப்பினர்களின் பேச்சுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளை வைத்து ம.தி.மு.க. அச்சுறுத்துவதாகவும் அவர்கள் கூறினர். இதனைத் தொடந்து அவையில் ம.தி.மு.க. மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்களிடையே கடும் வாக்குவாதம் எழுந்தது.

அவையில் கூச்சல், குழப்பம் ஏற்பட்டதால் கடும் அமளி எழுந்தது. ம.தி.மு.க. உறுப்பினர் வரதராஜன்,காங்கிரஸ் உறுப்பினரை நோக்கி பாய்ந்து சென்ற (08 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாது என்பதையே தாக்குதல் உணர்த்துகிறது

### அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினையை யுத்தத்தின் மூலம் ஒருபோதும் தீர்க்கமுடியாது என்பதையே விடுதலைப்புலிகளின் விமானத்தாக்குதல் உணர்த்தியுள்ளது. எனவே இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலம் அரசியல் தீர்வு காண முடியாதென்பதை அனைவரும் தற்போது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஐ.தே.கவின் மாற்றுக் குழு உறுப்பினரும் நிர்மாணத்துறை அமைச்சருமான (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஒவ்வொரு குண்டு வெடிப்பிற்கும் நாடாளுமன்றத்தை கூட்டமுடியாது

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தின் மீது கடந்த திங்கட்கிழமை தமிழீழ வான்படை நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து நாட்டின் தற்போதைய நெருக்கடியான நிலைமை தொடர்பாக விவாதிப்பதற்கு நாடாளுமன்றத்தை கூட்டவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் நிராகரித்துள்ளது.நாட்டில் குண்டுகள் வெடிக்கும் ஒவ்வொரு சமயமும் நாடாளுமன்றத்தைக் கூட்டமுடியாது என்று சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்றத் தலைவரும் அமைச்சருமானநிமால்சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சி செய்கின்றது. இது முழுக்க அரசியல் நோக்கம் கொண்டது. ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டபடி நாடாளுமன்றம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடவுள்ளது. கட்டுநாயக்கா வான்படைத் தளம் மீதான தாக்குதலுக்கு தேசிய அளவில் அவசரமாக நாடாளுமன்றத்தை கூட்டவேண்டிய அவசியம் இல்லை (08 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய வார பத்திரிகைகள் இரண்டு மூடப்படுகின்றன

(கொழும்பு)

அண்மைக்காலமாக பல்வேறு அரசியல் சர்ச்சைகளுக்கு உள்ளான இலங்கையின் தேசிய பத்திரிகைகளான மௌபிம என்ற சிங்கள வார இதழையும்,சண்டே ஸ்ராண்டட் என்ற ஆங்கில வார இதழையும் இவ்வார இறுதி முதல் மறு அறிவித்தல் வரை அச்சிடுவதில்லை என பத்திரிகை நிர்வாகத்தினர் தீர்மானித்திருப்பதாக தெரியவருகின்றது.

இந்தத் தீர்மானம் தொடர்பாக கருத்து வெளியிட்ட (08 ஆம் பக்கம் பார்க்க)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

## லசித்த மலிங்கவின் ஹெட்ரிக் உலக சாதனையுடன் தென்னாபிரிக்காவிடம் தோல்வியடைந்தது இலங்கை

தென்னாபிரிக்காவுடனான விறுவிறுப்பானஆட்டத்தில் ஒரு விக்கெட்டால் தோல்வியடைந்தது இலங்கை அணி. மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் சூப்பர் 8 ஆட்டத்தில் நேற்று முன்தினம் குஜனாவில் நடைபெற்ற 2-வது ஆட்டத்தில் இலங்கை-தென்னாபிரிக்காஅணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனா முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்தில் தென்னாபிரிக்காவின் பந்து வீச்சில் தடுமாறி 24.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 98 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

எனினும் டில்சான், ஆர்னொல்டின் சிறப்பான துடுப்பாட்டத்தினால் 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 209 ஓட்டங்கள் என்ற கௌரவமான எண்ணிக்கையைப் பெற்றது. இதில் துடுப்பாட்டத்தில் திலகரட்ண டில்சான் 58 ஓட்டங்களையும் ஆர்னொல்ட் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்கா அணி சார்பாக லாங்வேல்ட் 5 விக்கெட்டுக்களையும் நிற்னி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். தொடர்ந்து 50 ஓவர்களில் 210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி ஆரம்பத்தில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய போது இறுதியில் மலிங்கவின் வேகத்தில் தொடர்ச்சியாக 4 விக்கெட்டுக்களை இழந்தது.

இவ் அணி 36 பந்துகளில் 4 ஓட்டங்களை மாத்திரம் பெற்றால் வெற்றி என்றஇலக்குடன் 5விக்கெட்டுக்களைக் கைவசம் வைத்திருந்தது. தென்னாபிரிக்கா அணி மலிங்கவின் ஹெட்ரிக் சாதனையில் தொடர்ச்சியாக 4 விக்கெட்டுக்களையிழந்து 46.2 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 207 ஓட்டங்கள்ளப் பெற்றது.

இறுதியில் ரசிகர்களை இருக்கை நுனிக்கே கொண்டு சென்றது. எனினும் 48.2 ஓவர்களில் வெற்றி இலக்கான 210 ஓட்டங்களையும் கடந்து 212 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் ஐக் ஹலிஸ் 86 ஓட்டங்களையும் அணித்தலைவர் இராம் ஸிமித் 59 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக மலிங்க 4விக்கெட்டுக்களையும் முரளிதரன் 3விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் மலிங்கவின் ஹெட்ரிக் சாதனை உலக சாதனையாகப் பதிவு செய்யப்பட்டது. (ச-5)

### உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரராக முரளிதரன் தெரிவு!



உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர் எனும் விருது இலங்கையின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு இம்முறை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விஸ்டன் சஞ்சிகையே முரளிதரனை இவ்வாறு தெரிவு செய்து விருதளிக்கவுள்ளது. இச் சஞ்சிகை கிரிக்கெட் உலகின் வைபிள் என வர்ணிக்கப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்விருதினை பெறும் 4-வது கிரிக்கெட் வீரர் முரளிதரனாவார். ஏற்கனவே இவ்விருதுகளை ரிக்கி பொன்டிங், சேன் வோன், அன்ரூ பிளின்டொப் ஆகியோர் பெற்றுள்ளனர்.(ச-5)






## இந்தியாவில் கொள்வனவு செய்யப்பட்ட ராடர் கருவிகள் தரமானவையே!

### இந்திய அரசாங்கம் விளக்கம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் மீது கடந்த திங்கட்கிழமை தமிழீழ வான்படை நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து கட்டுநாயக்காவிலுள்ள ராடர் நிலையங்களின் செயற்திறன் தொடர்பாக கேள்வி எழுந்துள்ள நிலையில் தம்மால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ராடர் தொகுதிகள் தரமானவை என்று இந்தியா தெரிவித்துள்ளது.

எமது ராடர் தொகுதிகள் மிகவும் தரம் வாய்ந்தவை. நன்றாகத் தொழிற்படக் கூடியவை. அது முறையாக உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முன்னாள் காலஞ்சென்ற வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப்புலிகளின் வான்படை தொடர்பாக அமெரிக்காவின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் கொண்டலீசா ரைஸுடனான சந்திப்பின் போது எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அதே மாதம் இந்தியாவிடமிருந்து ராடர் கருவிகளை வாங்குவதற்கு இலங்கை அரசாங்கம் ஒப்புக் கொண்டிருந்தது. இந்தியா-11 என்னும் தலைப்பில் வழங்கப்பட்டுள்ள இந்த ராடர்களை பாரத் எலக்ரோனிக் லிமிரெட் நிறுவனம் வடிவமைத்திருந்தது. கடந்த ஆண்டு அவை இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. (ச-5)

## குடாநாட்டிற்கான தபால் பொதிகள் திருகோணமலை தபாலகத்தில் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையில் சுமார் 4 ஆயிரத்து 651 தபால் பொதிகள் திருகோணமலை தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதாகத் தெரியவருகின்றது.

தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகளில் பெரும்பாலானவை உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் எனவும் இவற்றில் சில சாதாரண தபால்கள் எனவும் இவைகள் கடந்த நவம்பர் மாதத்தின் பின்னர் தென்பகுதியிலிருந்து யாழ்.குடாநாட்டில் தங்கியுள்ள உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு முகவரியிடப்பட்ட தபால் பொதிகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தியாவசிய ஆணையாளரால் ஒரே தடவையில் இவற்றை அனுப்ப முடியாத காரணத்தினால் இவற்றில் 5 ஆயிரத்து 541 தபால் பொதிகள் மார் முதல் வாரத்தில் மோர்கஸ் யால என்ற கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எஞ்சியுள்ள தபால் பொதிகளும் அடுத்து வரும் கப்பலில் அனுப்பிவைக்கப்படும் என தபால்மா அதிபரினால் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்த போதிலும் இது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது. (ச)

### கிளிநொச்சியில் 11 ஆயிரம் குடும்பங்கள் இடப்பெயர்வு

வடக்குக் கிழக்கில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 11 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக கிளிநொச்சிமாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (ச-3)

## 'மலையில் வீழ்ந்த துளிகள்' திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் தயாரித்துவழங்கும் தவக்கால ஆற்றுகை 'மலையில் வீழ்ந்த துளிகள்' திருப்பாடுகளின் காட்சி கடந்த 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3.45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இக் காட்சி இன்றும் நாளையும் நாளை மறுதினமும் மன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது. (ச-3)

## சான்றிதழ் வழங்கல்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினால் கணனிப்பயிற்சியில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று காலை10 மணிக்கு சித்தன் கேணி லயன்ஸ் கழக செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ச-49)

## சமூக அபிவிருத்தி மன்றத்தின் மகளிர் தின ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

சமூக அபிவிருத்தி மன்றத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டமும் மகளிர் தின ஒன்றுகூடல் நிகழ்வும் நாளைக் காலை 11 மணிக்கு தலைவர் திருமதி என்.ஜெகதீசன் தலைமையில் மன்றக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## இலவச கணனி, ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடாத்தப்படவிருக்கும் கணனி, ஆங்கில கற்கைநெறி வகுப்புக்கள் எதிர்வரும் 03.04.2007 காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அன்று வருகை தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் இ.செ.ச. யாழ்.கிளைக் காரியாலய விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனக் கிளை நிறைவேற்று உத்தியோகஸ்தர் அறிவித்துள்ளார். (ச)

## உயர் தரப் பரீட்சை விண்ணப்பத் திகதியை நீடிக்குமாறு கூட்டமைப்புக் கோரிக்கை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதியை நீடிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழல் காரணமாக ஒரு லட்சத்து 51 ஆயிரம் பேர் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்திருக்கின்றார்கள்.

இவர்களில் ஆயிரக்கணக்கான மாணவர்களும் அடங்குகின்றனர். இவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலையில் பரீட்சைக்குத் தோற்றுவதில் சிக்கலை எதிர்நோக்கியிருக்கின்றார்கள்.

இந்நிலையில் எதிர்வரும் உயர் தரப் பரீட்சைக்கு உரிய தயார்படுத்தலை மேற்கொள்வதிலும் சிக்கலை எதிர்நோக்கியிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சைக்கான விண்ணப்ப திகதி இன்றுடன் முடிபடையும் நிலையில் விண்ணப்ப திகதி முடிபை எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி வரை நீடிக்குமாறுஅவர் கல்வியமைச்சரிடம் கோரியுள்ளார்.(ச-3)

## மன்னாருக்கு எடுத்துச் செல்லப்பட்ட இரும்புக் குண்டுகள் பிடிபட்டன

(மன்னார்)

கொழும்பிலிருந்து மன்னாருக்கு இரகசியமாக ஏற்றிச்செல்லப்பட்ட 15 மில்லியனுக்கும் அதிகமான இரும்புக் குண்டுகள் நேற்று பகல் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா-மன்னார் வீதியில் கட்டையரம்பன் பகுதியில் வைத்து இரும்புக் குண்டுகளை ஏற்றிச் சென்ற லொறி பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் அனுமதியின்றி ஏற்றிச்செல்லப்பட்ட சேலைன் போத்தல்களும் மருந்துப் போத்தல்களும் என பல பொருள்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொழும்புப் பிரதேசத்தில் வைத்து ஏற்றப்பட்ட இரும்புக் குண்டுகள் மற்றும் மருந்து வகைகள் மன்னார் பகுதியில் இருக்கின்ற ஒருவரிடம் ஒப்படைப்பதற்காக கொண்டு செல்லப்பட்டதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்ததாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-3)

## கேள்வி கோரல்

### போதனா வைத்தியசாலை மின்சார பராமரிப்பு

போதனா வைத்தியசாலையில் 01.06.2007 இல் இருந்து 31.05.2008 வரைக்கும் மின்சார பராமரிப்பு சம்பந்தமாகப் பதிவுடைய ஒப்பந்தக்காரரிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் தினம் 15.04.2007 காலை 10 மணி வரைக்கும்.

கேள்விப் பத்திரங்களை 05.04.2007 வரை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். பராமரிப்பு சம்பந்தமான கடமைகளும் நிபந்தனைகளும் கேள்விப் பத்திரத்துடன் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்களை 05.04.2007க்கு முன்பு 4500/= மீளளிக்கக் கூடிய பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

(C-668) - பணிப்பாளர்

## பின்னுறுதித் தீர்வை யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

இராசேந்திரன் பெண் அன்னலதா
கந்தசாமி மகள் அன்னலதா
பழம் வீதி, ஆனைக்கோட்டை

வழ.இல.மணநீக்கம் /688 வழக்காளி

எதிராக

பொன்னர் இராசேந்திரன்
பழம் வீதி, ஆனைக்கோட்டை
தற்போது ஜேர்மனி

எதிராளி

இவ்வழக்கு 2006 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவு பெற்ற சட்டத்தரணி திரு. சி.சதீஸ்வரனின் அனுசரணையுடன் சட்டத்தரணி திரு.குகனேஸ்வரன் அவர்களும் பிரசன்னமாயிருக்க எதிராளிக்கு அழைப்புக் கட்டளை 09.07.2006 ஆம் திகதிய வலம்புரிப் பத்திரிகையில் பிரசுரித்து பதில் சேவகம் செய் யப்பட்டு 27.07.2006 இல் திகதி மன்றில் கூப்பிடப்பட்ட போது எதிராளி மன்றில் சமுகமின்மையால் இவ் வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த வழக்காளியின் சட்டத்தரணி மன்றின் அனுமதியைக் கோரி மன்றின் அனுமதியுடன் வழக் காளியின் சாட்சியத்தையும் வழக்காளியின் தந்தை செல்லப்பா கந்தசாமியினதும் சாட்சியத்தையும் நெறிப்படுத்திய பின்னர் வழக்காளி தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் திருப்திப்பட்டு எதிராளியினால் வன்ம உறவறுப்பு என்ற குற்றம் புரியப்பட்டு வருவது இந் நீதிமன்றத்திற்குத் தெட்டத்தெளிவாகப் புலனாகின்றது என்ற இவ் அடிப்படையில் இம் மன்று வழக்காளியினால் அவரது பிராதில் கோரப்பட்ட நிவாரணங்களை வழங்கி பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

எதிராளிக்கும் வழக்காளிக்கும் இடையே 24.09.2000 ஆம் ஆண்டு நடைபெற்ற பதிவுத் திருமணத்தை இத்தால் இரத்துச் செய்து கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளி தனது கன்னிப்பெயரை முற்றான தீர்வை பதியப்பட்ட பின்னர் தொடர்ந்தும் உபயோகிக்கலாம் என கட்டளையிடப்படுகின்றது.

நிரந்தர பிரிமனைப் பணமாக ரூபா. இரண்டு இலட்சமும் நட்ட ஈடாக ரூபா.இரண்டு இலட்சமும் ஆக மொத்தம் ரூபா. நான்கு இலட்சத்தையும் வழக்காளிக்கு எதிராளி செலுத்த வேண்டுமென்றும் இன்றிலிருந்து இப் பணம் செலுத்தப்படும் வரையிலான வட்டியையும் கணக்கில் எடுக்கப்பட்டு அதுவும் செலுத்தப்பட வேண்டும் எனவும் இத்தால் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப் பின்னுறுதித் தீர்வையின் பிரதி பத்திரிகைப் பிரசுரத்தின் பின்னர் அல்லது எதிராளிக்கு மாநாட்டு உடன்படிக்கையின்படி வெளிநாட்டுத் தூதரகத்தின் ஊடாக ஜேர்மனியில் வசிக்கும் எதிராளிக்கு சேவிக்கப்படுவதன் மூலம் சேவகம் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப் பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 8 ஆம் திகதி

இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி
யாழ்ப்பாணம்.

வரைந்தது

வழக்காளியின் சட்டத்தரணி

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

(785)



# தரிசனம்


05 வலம்புரி

# இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது எவ்வாறு?

### பேதமை கடந்த 'சேவை' மனப்பாங்கு வளர்க்கப்பட வேண்டும்

இனங்களுக்கிடையேயான ஒற்றுமை ஏற்படவேண்டுமாயின் முதலில் சமாதானப் பேச்சு வார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும்.

இவ்வாறு தனது கருத்தை முன்வைக்கின்றார் மருத்துவரும், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தலைவருமான சி.சதாசிவம் அவர்கள் மருத்துவத் துறையில் நீண்ட காலசேவையும் தென்பகுதியில் கடமை யாற்றிய அவரை தரிசனத்திற்காக சந்தித்தோம்.



இனங்களுக்கிடையேயான ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய காலத்தையும் நேரத்தையும் அரசு தவறவிட்டுவிட்டது. இப் போது இனப்பிரச்சினை உச்சம் பெற்றுள்ளது.

உச்சம் பெற்றுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டறியப்பட வேண்டும். ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் முதலில் சிகிச்சை அளித்து அவரைக் குணப்படுத்த வேண்டும்.அதன் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது சாத்தியமாகும்.

அதனடிப்படையில் இலங்கையில் ஏறபட்டுள்ள இனப்பிரச்சினை என்ற நோய்க்கு முதலில் சிகிச்சை அளித்துக் குணப்படுத்துவது அவசியம் என வலியுறுத்தும் டாக்டர் சதாசிவம், இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வை அடைந்த அதே கணத்தில் இனங்களுக்கிடையேயான ஒற்றுமையை ஏற்படுத்துவது அவசியம் என வலியுறுத்துகின்றார். இன ஒற்றுமை என்பது எல்லா மக்களும் எல்லா உரிமைகளையும் அனுபவிக்கும் அடித்தளத்திலிருந்து உருவாக்கப்பட வேண்டும்.

சிங்கள மொழியை தமிழ் மக்களும் தமிழ் மொழியை சிங்கள மக்களும் கற்பதனால் இன ஒற்றுமை ஏற்படும் என்ற கருத்தை மறுதலிக்கும் அவர், தென் பகுதியில் கடமையாற்றிய தமிழர்களில் 90 வீதமானவர்கள் சிங்கள மொழிகளை அறிந்திருந்தவர்களாக இருந்தபோதிலும் அதன் வழியில் இன ஒற்றுமை ஏற்படவில்லை.

1983 ஜூலைக் கலவரத்தின் போது தென்பகுதியில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களில் 90 வீதமானவர்களுக்கு சிங்களம் பேசத் தெரிந்திருந்தது.

இன,மத, மொழி கடந்த 'சேவை' இன ஒற்றுமைக்கான ஊக்கியாகும். பொதுச் சேவை செய்யும் அமைப்புகளின் பணி மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் என்பதால் சேவை மனப்பாங்கை அனைத்து இன மக்களிடையேயும் வளர்ப்பதற்கான ஆக்கப்பாடுகளை உருவாக்கவேண்டும் என்பது அவரின் கருத்தாகவுள்ளது.

### *பரந்த மனப்பான்மையுடன் விட்டுக்கொடுத்தல்அவசியம்*

இந்தியாவில் பல இனங்கள் வாழுகின்றன. 33 மொழிகள் அரச மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இனங்களுக்கிடையில் ஒருமைப்பாடும் மொழிகளுக்கிடையில் சமத்துவமும் விளங்குவதால் பாரிய பிரச்சினைகள் அங்கு தோன்றுவதில்லை. இலங்கையில் இருப்பது மூவினங்கள் மட்டுமே. இவை தமக்கிடையே இன ஒருமைப்பாட்டை கொண்டிராதமையால் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக கொடிய போர் நிலவி வருகின்றது.இவ்வாறு கூறுகின்றார்

யாழ்.பல்கலைக்கழக ஊடகப் பயிற்சி மையத்தின் இணைப்பாளரும் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியருமான அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள். ஊடகவியல் ஆய்வில் தன்னை அர்ப்பணித்துள்ள அடிகளாருடனான சந்திப்பில்,

இலங்கையில் நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு ஏற்படும் விதமாக இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் கவனிக்கப்பட வேண்டிய அடிப்படையான விடயங்களில் ஒன்று இனங்களுக்கிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதாகும். இதற்கு மொழிக் கல்வியும் மொழிகளுக்கான அரச அங்கீகாரமும் முக்கியமானதாகும். இரண்டு மொழிகள் மட்டுமே உள்ள இலங்கைத் தீவில் இரண்டு மொழிகளையும் இரு இனத்தவரும் கட்டாயப்படுத்தப்படாமல் கற்கின்ற ஓர் சூழ்நிலை உருவாகவேண்டும்.

சிங்கள மொழி கட்டாயப்படுத்தப்பட்டு திணிக்கப்பட்டதால் அனேகரால் அது ஏற்றுக்கொளளப்படவில்லை.

இரண்டு மொழிக் கல்வியும் இரண்டு இனத்தவருக்கும் அவசியமாக்கப்பட வேண்டும்.இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடாகும். பல மதங்கள் அங்கிருந்தாலும் எந்த மதத்திற்கும் சிறப்பிடம் வழங்கப்படுவதில்லை. இதனால்,

## வடக்கின் கருத்துக்கள்

இந்துமத நாடான இந்தியாவின் பிரதமராக சீக்கிய இனத்தைச்சார்ந்த ஒருவரும், ஜனாதிபதியாக முஸ்லிம் இனத்தைச்சார்ந்த ஒருவரும் அதிக அரசியல் அதிகாரம் கொண்டவராக கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த ஒருவரும் இருக்கக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. உலகின் நான்கு மதங்களையும் கொண்ட நாடு இலங்கை.



இது பௌத்த மத நாடாக மட்டும் அறிவிக்கப்பட்டிருப்பதும் மற்றைய மதங்களுக்கு அரசியல் அமைப்பில் இடம் வழங்கப்படாமல் இருப்பதும் ஆய்வு செய்யப் பட வேண்டியதாகும். பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களுக்கும் அரசியல் அமைப்பில் சம இடம் வழங்கப்படவேண்டும். அல்லது எந்த மதத்திற்கும் எந்த சிறப்பிடமும் வழங்கப்படாமல் விடப்படவேண்டும்.

இவற்றை செயல்முறைப்படுத்த கடந்தகால கசப்பான அனுபவங்களை மறந்து பரந்த மனப்பாங்கோடு விட்டுக்கொடுத்தல், புதியதோர் நாட்டைக் கட்டியெழுப்புதல், அனைவரும் ஒருமித்து நிற்றல் என்ற வரிசையில் இன ஒற்றுமைப்பாட்டின் இலக்கு முன்னெடுக்கப்படவேண்டும்.

### *கலையின் பகிர்வுகள் தேவை*

மொழிகளுக்கு அப்பால் உணர்வும் பாவனையும் இணைந்த கலையினூடாகஇனங்களுக்கிடையேயானஉறவு நிலையை



மேம்படுத்து வது சாத்தியமானதாகும். இவ்வாறு கூறுகின்றார் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் நடனக்கலை விரிவுரையாளர் திருமதி சாந்தினி சிவநேசன் அவர்கள்.

கலாகீர்த்தனா விருது பெற்ற அவரை தரிசனத்துக்காக சந்தித்தோம். இனஒற்றுமை என பது உணர்வை வெளிப்ப டுத்துவதிலும், வதிலும் தங்கியுள்ளது. இலங்கையை பொறுத்தவரை சிறுபான்மையினத்தவர்களின் பிரச்சினையைப் பெரும்பான்மை இனத்தவர்கள் புரிந்துகொள்வதில் மிகப்பெரும் இடைவெளியுள்ளது. இந்த இடைவெளியை சீர்செய்வதில் கலைப்படைப்புகள் கணிசமான பங்கை ஆற்ற முடியும்.

எனினும் கலையினூடாக இன ஒற்றுமையை வளர்க்கும் சிந்தனைகள் வியாபகம் பெற்றதாகத் தெரியவில்லை.

எனது தந்தையார் ஏரம்பு சுப்பையா கதகளி நடனக்கலையை கேரளாவில், குருஜி கோபிநாத்திடம் முறைப்படி கற்றிருந்தார். அதே குருவிடம் சிங்களக் கலைஞர்களான சித்திரசேன வைச்சிர வசந்தகுமார ஆகியோரும் பயின்றார்கள் .

முப்பது வருடங்களுக்கு முன்னர் சிங்களக் கலைஞர்கள் யாழ். இராமநாதன் கல்லூரிக்கு வருகை தந்திருந்ததை நினைவுபடுத்தும் சாந்தினி சிவநேசன் . யாழ் .பரமேஸ்வராக்கல்லூரி இயங்கிய காலத்தில் யாழ்ப்பாண நடனக்கலையை அறிவதற்காக வர்ணசூரிய வ்ந்திருந்தார். இப்போது கூட கொழும்பில் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரன் போன்றவர்களிடம் சிங்கள மாணவிகள் பரதநாட்டியம் பயின்று வருகிறார்கள். எனினும் ஒரு சில நிகழ்வுகள் மட்டும் இன ஒற்றுமையை ஏற்படுத்திவிடமாட்டா.

இன பேதம் கடந்த கலைத்துவப் படைப்புகள் இன ஒற்றுமையின் அடித்தளங்களாகும். அதற்கு முன்னதாக கலைப்படைப்புகளை ஆக்கவும், இரசிக்கவும் இருக்கக் கூடிய சுதந்திரம், இன அடிப்படையில் கூடிக் குறையுமாயின் கலையின் விளைவும் அதன் எதிர்பார்ப்பும் வேறுபட்டதாகவே அமையும் என்கிறார் அவர்.

### இன ஒற்றுமைக்காக ஊடகங்கள் குரல்தர வேண்டும்

இனங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் அரசியல் மட்டத்திலும், பொதுமக்கள் மத்தியிலும் மாற்றம் ஏற்படுவது அவசியமாகும் எனக் கூறுகின்றார் யாழ்ப்பாணம் சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் நடராஜா சுகிர்தராஜ்.


இனங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதில் தென்பகுதியிலும், கிழக்கு மாகாணத்திலும் சமாதானச் செயற்பாட்டாளராகக் கடமையாற்றிய அவரை தரிசனத்திற்காகச் சந்தித்தோம். அரசியல் யாப்பிலும், சட்டங்களிலும் மாற்றங்களைக் கொண்டு வருவதனூடாக மட்டும் நிரந்தரமானதும், உண்மையானதுமான சமாதானத்தை அடைந்து விட முடியாது.

சமாதானம் என்பது மனதுடன் சம்பந்தப்பட்டது. சமாதானம் ஏற்பட்டால் கூட அதனின் அனுபவிப்பு உச்சமாக இருக்குமென்று கூற இயலாது. ஏனெனில் சமாதானத்தால், கடந்த காலங்களில் ஏற்பட்ட இழப்புகளை ஈடாக்கி விட முடியாது.

இனப் போரில் புண்பட்டவர்கள் ஒருவரில் ஒருவர் காழ்ப்புணர்வு கொள்ளவே செய்வர். இந்த உணர்நிலை, சமாதானத்தின் அடைவு மட்டத்திற்கும், இன ஒற்றுமைக்கும் பாதகமாகவே இருக்கும். இவை ''மீள் ஒப்புரவாக்கம்'' செய்யப்பட வேண்டும்.

- மூவினங்களையும் சந்திக்க வைத்தல்.
- சுயமாகப் புரிந்துணரவைத்தல்.
- பிரச்சினைகளை வெளிப்படுத்தி உணரவைத்தல் என்பன இன ஒற்றுமையின் வலிமைப்பாடுகளாகும்.

இனங்களுக்கிடையேயான ஒற்றுமை என்பது தனித்து யுத்த சூழ்நிலையை மட்டும் மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படலாகாது எனக் கூறும் இவர், தமிழ் மக்கள் படும் அவலங்களை உணரமுடியாதவாறு தென்னிலங்கை மக்களை இன வாத ஊடகங்கள் கட்டுப்படுத்தியுள்ளன என்கிறார். தமிழர் பிரச்சினையை பயங்கரவாதப்



பிரச்சினையாகக் காட்டுவதில் தம்மை ஈடுபடுத்தியுள்ள இனவாத ஊடகங்களிடையே மாற்றம் ஏற்படவேண்டும்.

இன ஒற்றுமைப்பாட்டில் ஊடகங்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும். அந்த அவசியப்பாடு உண்மையைக் கூறுவதிலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும்.தேசிய அடையாள அட்டை இந்த நாட்டின் பிரஜைகளுக்குரியதாயினும், தமிழ் மக்களின் தேசிய அடையாள அட்டையை சிங்கள மக்கள் இனங்கண்டு கொள்வதற்காக சிங்கள மொழிப் பயன்பாடு இருப்பது போல், சிங்கள மக்களின் தேசிய அடையாள அட்டையை தமிழ் மக்கள் இனங்கண்டு கொள்வதற்கான தமிழ் மொழிப் பயன்பாடு இருக்க வேண்டுமல்லவா? அது ஏன் இல்லாமல் போனது இது போன்ற பல விடயங்களைஆராய்வது இன ஒற்றுமைக்கான தேவைப்பாடாகும் என்றும் அவர் வலியுறுத்துகிறார்.

### அரசியல்வாதிகளிடம் மனமாற்றம் வேண்டும்

வேறுபட்ட இனங்களுக்கிடையே ஐக்கியம் ஏற்படுவதன் மூலமே நாம் அனைவரும் ஒரே நாட்டவர்கள் என்ற உணர்வை



ஏற்படுத்தமுடியும், பல்லினம் வாழ்கின்ற நாட்டில் குறித்த ஒரு இனம் அந்த நாட்டின் உரிமையை தன தாக்கிக் கொள்ளுமாயின் அங்கு ஒறறுமை என்ற பதம் உயிர்ப்புப் பெறுவது சாத்தியமாகாது. இவ்வாறு தனது கருத்தை முன்வைக்கின்றார் சிரேஷ்ட சட்டத்தரணியும், யாழ்.பல்கலைக்கழக பகுதிநேர சட்ட விரிவுரையாளருமான அருளம்பலம் இராஜரட்ணம் அவர்கள்.

இன ஒற்றுமை என்பது பல் கோணங்களில் இருந்து வலிமைப் படுத்தக்கூடியது எனினும் அதனைச் செய்வதாயின் இன, மத, மொழி என்ற பேதங்கள் கடந்து சகல இனங்களும் ஆட்சியில் பங்குகொள்ளும் சமத்துவம் ஏற்படவேண்டும்.

பாராளுமன்ற ஆசனங்களைக் குறுக்கு வழியில் கைப்பற்றுவ்தற்காக இன, மத, மொழியின் பெயரால் அரசியல் நடத்துவோர் மக்களிடையே இருந்த ஒற்றுமையை சிதறடித்தும், இனத்துவேசத்தைத் தூண்டியும் வந்தனர், வருகின்றனர். பெரும்பான்மை இனம்சார்ந்த அரசியல்வாதிகளின் இந் நடவடிக்கைகள சிறுபான்மையினருக்கு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தி யது.

இச் சந்தேகம் நியாயமானது மட்டுமன்றி, சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் உரிமைகளை ஒருபோதும் பாதுகாக்க மாட்டார்களென்ற முடிவை எடுப்பதற்கும் துணைபோயிற்று. இனங்களுக்கிடையேயான இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு முன்னதாக ஆட்சியில் இருப்பவர்களின் மனப்பாங்கு முதலில் மாற்றமடைய வேண்டும்.

கூடவே இன,மத மொழியை மையமாக வைத்து அரசியல் நடத்தும் கட்சிகளைத் தடைசெய்யும் வகையில் சட்டங்களை நிறைவேற்றுவது அவசியமாகும்.

மதகுருமார்கள் ஆத்மீகப் போதனைகளுடன் இன ஒற்றுமையை முன்னெடுக்கும் முயற்சிகளை மேற்கொள்வதைத் தமது பணியாகக் கொள்ளவேண்டும். மதகுருமார் அரசியலில் பங்கெடுப்பது சட்டத்தால் தடைசெய்யப்படுவது கட்டாயமானதாகும்.

சந்திப்பு
என்.விஜயசுந்தரம்

இத்தகையதோர் ஏற்பாட்டின் மத்தியில் இரு மொழிக்கற்றல், தேசிய குழுககள் அமைத்தல் கலைப் பண்பாட்டுப் பகிர்வுகள் என்பனவற்றின் முன்னெடுப்புக்களும் இனங்களுக்கிடையேயான ஒற்றுமையை வளப்படுத்துவதாக அமையும்.



# தரிசனம்

### நம்பகத் தன்மையின் மூலமே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

**ஹிலரி குரே**

**(நிபுணத்துவ தொழில்சார் சங்கத் தலைவர்)**

நம்பகத் தன்மையே இன்று நமது தேவையாகும்.நம்பகத் தன்மையைக் கட்டியெழுப்பாமல் எம்மால் ஒற்றுமைத் தன்மையைப் பற்றி நினைத்துப் பார்க்கவே முடியாது. பேச்சுவார்த்தைகள் சந்திப்புக்கள் கூட்டங்கள் அனைத்தும் தோல்வியுறுவதற்கு காரணம் நம்பிக்கையின்மையே. இதற்கு பிரதானகாரணம் நாம் அர்ப்பணிப்புத் தன்மை கொண்டவர்களாக இராமையே.



எம் மீது நம்பிக்கைக்கொள்ள அவர்களுக்கு நாம் என்ன செய்தோம்? ஆகக் குறைந்தது நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி அமுலாக்கத்தைக் கூட நாம சரிவர செய்தோமா? அனைத்தும் சிங்களவர்களிடம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில்எம் மீது நம்பிக்கை கொள்ள நாம் அவர்களுக்கு என்ன செய்தோம்?

சுதந்திரம் பெறும்போது நாம் தமிழ் மொழிக்கு ஓர்சிறந்த இடத்தை வழங்குவதாக உறுதி அளித்தோம்.டட்லி சேனாநாயக்க, செல்வநாயகம் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகளில் எதையாவது நிறைவேற்றினோமா? குடும்பத்தில் ஒற்றுமைத்தன்மை நிலவ நம்பிக்கை தன்மை அவசியம்.அவ்வாறாயின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண நம்பிக்கையைக் கட்டியெழுப்ப நாம் பல தியாகங்களை செய்யவேண்டியுள்ளது. பிரபாகரன் மீது நம்பிக்கை கொள்ளாமல் விடலாம். ஆனால் தமிழ் மக்கள் மீது நம்பிக்கைகொள்ள முடியும்.

அந்த நம்பிக்கை நிலை உறுதியானால் மட்டுமே ஒற்றுமையை நாம் ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

### நாம் முன்னுதாரணமாக திகழ வேண்டும்

**ரோசி சேனாநாயக்க**

தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினையில் நாம் உணர்வு பூர்வமாக நடந்து கொள்ளவில்லை.



அது தான் நாம் செய்த தவறு.பிற இனத்தை மதிக்காமல் எப்படி சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். மலேஷியா,சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் எம்மைப் போன்று பல்லின சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர்.அவர்கள் வெளிப்படுத்தும் இனங்கள் மீதான கௌரவம் மற்றும் பிறரை மதிக்கும் சுபாவம் காரணமாக அந் நாடு உலகில் சிறந்த நாடுகளாக

## இனங்களுக்கிடையே ஒற்றுமையை

முன்னேறி வருகின்றன. ஆனால் நாம் முன்னுதாரணமாக திகழ என்றுமே முயற்சித்ததில்லை. மக்களை அன்னியோன்யத்துடன் மதிக்கும் பண்பை நாம் வளர்த்துக்கொள்ளவில்லை. இவை அனைத்தும் எமது நாட்டின் அரசியல் முறைகளினால் ஏற்பட்ட சீர்கேடான நிலைமை.

அரசியல் நலன்களுக்காக பெரும்பாண்மையினரின் நலனே முக்கியமாக கருதப்பட்டதினால் சிறுபான்மை மக்கள் ஒதுக்கப்பட்ட நிலைக்குள்ளாகினர். இந்த பிரிவினைவாதிகளினால் மக்கள் மத்தியில் பிளவு நிலை ஏற்பட்டது.

இவற்றையெலாம் தோற்கடிக்காது ஒற்றுமையை வளர்க்க முடியாது. இவற்றையெலாம் பாடசாலை மட்டத்திலிருந்தே நாம் ஆரம்பிக்க் வேண்டும். குடும்ப மடடத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.இப்பொழுதாவது தமிழ் மக்களை சகோதரர்களாக நாம் நோக்க வேண்டும். இவற்றையெலாம் இந்த பரம்பரையினரால் மேற்கொள்ள முடியாவிட்டால் அடுத்த பரம்பரையிலாவது மேற்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

### இரு தரப்புப் பிரதிநிதிகளும் நேர்மைத் தன்மையைக் கடைப் பிடிக்க வேண்டும்

**ஒஸ்ரின் பெர்ணாந்து**

**(பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர்)**



இரு தரப்பினரையும் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் இருக்கின்றனர். வடக்கில் விடுதலைப்புலிகள், தமிழ் அமைப்புக்கள் மற்றும் தெற்கில் பல அமைப்புககளும் உள்ளன.

இவர்கள் அனைவரும் இறுதியில் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அதனால் முதலில் இவர்கள் அனைவரும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவேண்டியது அவசியமாகும். இந்த இணக்கப்பாடின்றி என்றுமே பிரச்சினையைத் தீர்ப்பது இலகுவாகாது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதன் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று ஒரு சிலர் கருதுகின்றார்கள். சிலர் யுத்தத்தின் மூலம் இந்த பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று கருதுகின்றார்கள்.

இவை அனைத்தையும் நாம் சீர்தூக்கிப் பார்த்துள்ளோம்.ஆனால் பெறுபேறு வெற்றி அளிக்கவில்லை. வட பகுதி மக்கள் பட்டினி கிடக்கின்றார்கள் என்று செய்தி பரவும் போது அரசாங்கம் தேவைக்கு அதிகமாக உணவு அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறுகின்றது.

அவ்வாறாயின் யார் உண்மை கூறுகின்றார்கள்.நாம் ஒற்றுமையைக் குலைக்கக் காரணமாக இருந்த விடயங்களை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். சீர்தூக்கிப் பார்த்து பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும்.

அது நேர்மையான முயற்சியாக இருக்க வேண்டும். இருதரப்பும் அர்ப்பணிப்புத் தன்மையைக் கடைப்பிடித்தால் இலக்கை அடையமுடியும்.

அரசியல், சமய ரீதியில் மட்டுமன்றி அனைத்து தரப்பும் கூட்டாக முயற்சிக்க வேண்டும். குறிப்பாக ஊடகங்களின் நேர்மையான தலையீடு அவசியம்.இவை அனைத்தையும் நிறைவேற்றுவதன் மூலமே இந்தப் பிரச்சினையைத்தீர்க்க முடியும்.

### தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ளாமல் தீர்வில்லை

**சுனேத்திரா ராஜகருணா**

**(எழுத்தாளர்)**



இன்று பிறர் மீதான நம்பிக்கைகள் அற்ற நிலையே உள்ளது. நான் கிளிநொச்சியை சேர்ந்த பெண்களுக்கென செயலமர்வு ஒன்றினை நடத்தினேன்.

இந்த நிலையில் சமாதானமும் ஒற்றுமையும் நிகழ்ச்சித் திட்டங்களாகி விடும்.

நாம் ஒருபோதும் நேர்மையுடன் செயற்படவில்லை. நேர்மைத் தன்மையின்றி எப்படி நாம் ஒற்றுமையுடன் வாழ முடியும்.

தமிழ் மக்களை ஏற்றுக்கொள்ளாமல் எப்படி நாம் ஒற்றுமையாக வாழ முடியும். அவர்களுக்கு சம உரிமை வழங்காமல் எப்படி ஒன்றுபடுவது? இவையனைத்தையும் முயற்சியுடனும் நேர்மைத்தன்மையுடனும் கட்டியெழுப்ப வேண்டும்.

### முட்டாள் அரசியல்வாதிகளுடன் சாத்தியமில்லை

***பேராசிரியர் அநுருத்த செனவிரத்தின***

நமக்குள் ஒற்றுமை என்பதே இல்லை.ஆனால் ஒற்றுமையின்மையை நன்கு விதைத்துள்ளார்கள்.அரசியல் அதிகாரத்தின் கீழேயே இவ்வாறு நடைபெற்றது. சிங்களவர்களான எமக்கு சிங்கம் ஒன்று உள்ளது. அதனால் நாம் ஆரியர்கள், தமிழர்கள் திராவிடர்கள். அவர்களுக்கு புலி உண்டு. இவை பழங்காலத்திலிருந்தே நிலவிவருகின்றது.இவை அடையாளத்தைப் பேணிக்கொள்ள விதைக்கப்பட்டவை.

இவ்வாறாக விதைக்கப்பட்ட விடயம் அரச கருமமொழியாக சிங்களம் மாற்றப்பட்டது முதல் விஷமாக மாறியது. அன்று தொடக்கம் எமது ஒற்றுமை குலைந்தது. நாம் ஒரே இடத்திற்குள் தள்ளப்பட்டோம். நாம் எம்முடையது என்று வடிவமைத்துக்

## ஏற்படுத்துவது எவ்வாறு?

முதல் இரு நாட்களும் அவர்கள் அக்கறையுடன் செயற்பட்டனர். பின்னர் அவர்கள் செயலமர்வை புறக்கணிக்கத் தொடங்கினர்.

சிங்களவர்கள் நடத்தும் நிகழ்ச்சிகள் தொடர்பாக அவர்கள் மத்தியில் நம்பிக்கையின்மை ஏற்பட்டதே இதற்குக் காரணம் என்று பின்னர் அறிந்துகொள்ள முடிந்தது. இதுதான் இன்றைய நிலைமை. நாம் கிளிநொச்சிக்கு சென்றுவர முடியும். ஆனால் அவர்களால் கொழும்புக்கு வந்து சுதந்திரமாக நடமாட முடியுமா? தமிழர் ஒருவரால் அவசரத்திற்கு ஒரு வீட்டை வாடகைக்கு பெற்றுக் கொள்ள முடியுமா? அந்தளவுக்கு நம்பகத் தன்மை இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. தோட்டப்பகுதி மக்களுடன் நல்லுறவை வளர்த்துக்கொண்டு வாழ முடியாதா? அவ்வாறாயின் தமிழ் மக்களும் எம் மீது நம்பிக்கைகொள்ள தொடங்குவர்.

ஏன் எம்மால் தெற்கில் வாழும்

கொண்ட விடயங்கள் எதுவுமே எமதல்ல. சிங்கள தமிழ் புத்தாண்டும் அவ்வாறானது.

இந்தப் பிரச்சினைகள் அனைத்திற்கும் காரணம் அரசியல்வாதிகளே. இந்த முட்டாள் அரசியல்வாதிகளினால் ஒற்றுமையைப் பற்றி பேச முடியாது.



ஏனெனில் அவர்கள் தான் ஒற்றுமையின்மையை விதைக்கின்றார்கள். அன்று தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்று

## தெற்கின் கருத்துக்கள்

தமிழர்களுடன் ஒற்றுமையுடன் வாழ முடியாது. இன்று நம்மத்தியில் அவ்வாறான ஒற்றுமைத்தன்மை கூட இல்லையே.

இவையெலாம் யாருடைய தவறு? எதனால் இந்தத் தவறுகள் ஏற்பட்டன என்று ஆராய்ந்து பார்ப்பது அர்த்தமற்றது. எப்படியோ தவறுகள் நிகழ்ந்துவிட்டன. தவறுகளை சரிப்படுத்துவதே அவசியம். இதற்குப் பிரதான பெரும்பான்மை இனம் என்ற வகையில், நாம் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். இது பற்றி ஒரு பத்திரிகை தாள் அளவுக்கு மட்டும் பேசுவது போதுமானதல்ல. எல்லாம் நிகழ்ச்சித் திட்டங்களாகிவிட்டன.

மையுடன் இருந்தனர். இன்று பாடசாலை மட்டத்தில் கூட அவ்வாறான நட்புறவு இல்லை. ஒவ்வொருவரும் தனித் தீவுகளில் இருக்கின்றனர். இந்த ஒற்றுமைத் தன்மையை நாமே கட்டியெழுப்ப வேண்டும். தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதை நாம் சற்று நினைத்துப் பார்க்க வேண்டும். நினைத்துப் பார்ப்பது மட்டும் போதாது. அந்த தவறுகளை சரிப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இவற்றை நாம் மட்டுமன்றி முட்டாள் அரசியல்வாதிகளும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அமுல்படுத்தவும் வேண்டும்.



# தரிசனம்

රාවය
ராவய



# போர்ச் சூழலும் பண்பாட்டுப் பிறழ்வும்

**தர்மசிறி பண்டாரநாயக்க**

**தெற்கின் கருத்துக்கள்**

80களில் ஆரம்பமான யுத்தமும் திறந்த பொருளாதாரமும் கலைகள் மற்றும் கலாசாரத்தை அழிப்பதற்குக் காரணமாகஅமைந்தது என்ற கருத்தொன்று நிலவுகின்றது. எனது கருத்தின்படி கலைகளை அழிப்பதற்கு காரணமாக அமைந்தது யுத்தமாகும். யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவதற்காக விதிக்கப்பட்ட அனைத்து விதமான நிபந்தனைகளும் அழிவை நோக்கியதாக அமைந்ததே தவிர மனித பெறுமதி நிலையினை உயர்த்த வழிகோலவில்லை.

நாம் எவ்வளவு தான் எதிர்த்தாலும் திறந்த பொருளாதாரத்திற்கு சில கலாசார வலையமைப்புகளை அதிகரிக்கும் இயல்பு காணப்படவே செய்கின்றது. முதலாளித்துவத்தில் கலைகள் வளர்ச்சி எய்தும் என்று நாம் கூறுவதும் அதனாலேயே எனலாம். ஆனால் இன்றைய சூழநிலையில் அவ்வாறான எதுவுமே நடைபெறவில்லை. யுத்தம் காரணமாக இன்று சிங்கள சமூகத்தில் மட்டுமன்றி தமிழ் சமூகத்திலும் மனித உணர்வுகள் பொருட்டாகக் கொள்ளப்படாத மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் வசிக்கும் ஒவ்வொரு பிரஜையினாலும் இந்த நிலைமையிலிருந்து மீளமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

70களிலும் 80களிலும் சிறந்த திரைப்படங்களை, நாடகங்களை அல்லது வேறு சிறந்த கலைப் படைப்புக்களை இரசிப்பதற்கு ஆவலுடன் இருந்த பலர் நம் மத்தியில் இருந்தனர். பின்னர் அந்த இரசிப்புத்தன்மை முழுமையான நிராகரிப்புக்குட்பட்டு தேசப்பற்று என்ற விடயத்துடன் கலந்து படைப்புக்களை இரசிக்கும் அளவுக்கு சமூகம் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது.

60மற்றும் 70களில் கலைப் படைப்புகளுக்கும் தேவையெனில் தேசத்துரோகம் என்ற முத்திரையைக் குத்தும் நிலையைக் காணமுடிந்தது. ஆனால் இன்று மனித நியாயங்களை பற்றிப் பேசும் படைப்புகளுக்கு மோசமான முத்திரைகள் குத்தப்படுகின்றன.

இது யுத்தம் காரணமாக ஏற்பட்ட திரிபு நிலையாகும். அதன் பின்னர் கலைகள் தொடர்பான தணிக்கைகள் அமுலாகின. இந்த நிலைமை சில சந்தர்ப்பங்களில் வன்முறையை நோக்கி தள்ளப்பட்டமையையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கைகளைக் கோர்த்துக் கொண்டு பிணைந்திருந்த சமூகத்தை பிளவுப்படுத்தி தனிமைப்பட வைத்ததும் இந்த யுத்தச் சூழ்நிலையே. தற்போது மக்கள் சிறுசிறு குழுக்களாகவோ தனித்தோ இருந்து துன்புறும் அவல நிலை காணப்படுகின்றது. இதனால் முழு சமுதாயமும் ஒன்றுபடும் குணவியல்பு காணாமற் போயுள்ளது.

யுத்தப் பின்னணியில் எப்படியாவது தம்மைக் காப்பாற்றிக் கொள்ள தப்பியோடுவதே இதற்கு காரணமாகும். இவ்வாறான நோயில் அவதிப்படும் மக்களுக்கு கலாரசனைகள் இருக்கமுடியாது. பயிற்சி இருந்தால் மட்டுமே கலாரசனை வளர்ச்சியுறும். 80களில் அன்றிருந்த மனித சமூகத்தின் வளர்ச்சிப் போக்கு நிலை ஒன்றொன்றாக உடைந்து வீழ்ச்சியடைவதை நேரடியாகவே அவதானிக்க முடிந்தது. கல்வித் துறையில் பாடத்திட்டங்களில் கூடகலை இலக்கியங்கள் அற்றுப்போன நிலைமையும் கூட இதன் பிரதி பலன் என்றே கூறமுடியும்.

வயது வந்தோர் பாடத்திட்டங்களை வடிவமைக்கும் போது மாணவர் குணவியல்புகளை மறந்து செயற்படுவதும் எமது வயதுவந்தோர்கள் முன்னர் கூறப்பட்ட சமூக நிலைக்கு இரையானதனாலேயே என்று கூறமுடியும். திரிபுபடுத்தப்பட்ட மனோநிலையை எய்தியவர்களினால் மாணவர்களுக்கான பாடத் திட்டங்களை வடிவமைக்க முடியாது.

இந்த நிலையை வடபகுதியுடன் பொருத்திப் பார்த்தால் அங்கு அவர்களுக்கான தொழிநுட்பங்கள் மற்றும் ஊடகங்கள் அனைத்தும் கைகளுக்கு எட்ட முடியாத தொலைவுக்கு சென்று விட்டது. அதனால் அவர்களினால் பழைமை வாய்ந்த கலாசார நிலைகளை எந்த விதமான ஊறுகளும் தலையீடுகளும் இன்றி பாதுகாக்க முடிகின்றது. வடக்கில் கலாசாரங்களை பாதுகாக்கவும் தெற்கில் கலாசாரங்களைஅழிவுறும் நிலைக்கு தள்ளவும் யுத்தம் காரணமாக அமைந்துள்ளது என்பது தெளிவாகியுள்ளது.

ஆனால் எமக்கு தேவை யுத்தத்தின் தணிக்கையோ சமூக திரிபு நிலையோ அல்ல.

அவற்றுக்கு தேவையான மாற்றுவழிகளே எமக்கு அவசியம். யுத்தத்தின் அழுத்தத்திற்குள்ளாகாத சமூக கலாசார வளர்ச்சிப் போக்கு நிலையே எமது தேவையாகும்.

### ஆசிரியர் குறிப்பு

**சிங்கள மக்களும் தமிழ் ம க்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதைத் தவிர சிறந்த எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள வேறுவழிகளில்லை என்றே கூறவேண்டும். மக்கள் ஒருவரையொருவர் நம்பிச் செயற்படவேண்டும். இல்லாவிடின் அச்சத்துடனும் சந்தேகத்துடனும் மோசமான அனுபவங்களுடனான வாழ்க்கையை எதிர்கொள்ள நேரிடும்.**

**குறிப்பாக இனப்பிரச்சினை என்ற நீண்டகால ரீதியில் ஒருவர் மீது ஒருவர் அவநம்பிக்கை கொள்ளும் மற்றும் அசமத்துவத்திற்குள்ளாகும் பயங்கரமான மோதல் நிலையை தீர்த்துக்கொள்ள வேண்டுமெனில் இனங்களுக்கிடையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் என்ற வரலாற்று நடவடிக்கையின் முதற்கட்டமாக இச் செயல் அமைய வேண்டும்.**

**அதற்கு ஒருவரையொருவர் சிறந்த வகையில் புரிந்துகொள்ளும்-ஒருவரையொருவர் மதிக்கும் நட்புறவான மேடையை நோக்கி நாம் பயணிக்க வேண்டியிருப்பது அவசியமாகும்.**



## ஜூலை 26 மன்னாரில்

சூறாவளியுடன் போராடும் கடுமையான கடலலைகள்
இரவில் மன்னார் கரை அதிர்கின்றது
ஓலமிட்டு அடங்கும் ஒரு வேளையில்
பின்னர் அலறலுடன் அனைத்தும் ஆரம்பிக்கும்

மனித குரல் ஒன்று காற்றில் கலந்துவரும்
காதுகளில் உன் பேச்சு தழுவிச் செல்லும் மௌனமாக
ஜூலையின் அனல்களுடன் விட்டுவிட்டு வீசும்
காற்றுக்குக் கூட சிங்களம் இல்லாதவர்களை
மோப்பமிடத் தெரிகின்றது

மன்னார் நகரத்தில் அடங்கி ஒளிவீசும் விளக்கு
சாவீட்டின் அமைதியையும் பீதியையும்
வெளிப்படுத்தும்
உனது எதிரிகள் வசிக்கும் உலகத்தில் தனித்து நான்
பயந்து நடுங்கும் உன் மனதை காதலுடன் வருடுகிறேன்

பெற்றோர்களும் உற்றோர்களும் பிறந்து வளர்ந்த
இடத்திலேயே
கரிக்கட்டைகளாகி எரிந்து சாம்பலாகுவது போன்ற
நினைவு
உன் அலறல் கடலின் ஆர்ப்பரிப்புக்கு சமானாகக்
கேட்கும்
இரவுகள் நீள்கின்றன விடியலை காணாமல்

விரிந்து கிடக்கும் சமுத்திரத்திலிருந்து எழுந்து வரும்
சூறாவளி
கடற் பாதைகள்அனைத்தும் துவம்சமாகி ஆர்ப்பரித்து
எழும்
அந்த சின்னஞ்சிறிய நிலம் நாட்டுடன் தொட்டுக்
கொண்டிருந்தாலும்
என் நிழல் தரும் இடம் உனக்கு சற்று நிம்மதியை தரும்

**நந்தன வீரசிங்க**
(கிங் கங்கையின் ஓலம் என்ற நூலிலிருந்து)



தரிசனம்
வலம்புரி

# போர்ச் சூழலும் பண்பாட்டுப் பிறழ்வும்

## வடக்கின் கருத்து

மனித வாழ்க்கை மாசுபடுவதற்கு சூழல் காரணமாக அமைவதை இன்று கண்கூடாகக் காணமுடிகிறது. இயற்கைச் சூழலோடு இயைபுபட்டிருந்த மனித வாழ்வியல் செயற்கைச் சூழலால் சீரழிந்து போய்விடும். வடக்கில் இன்று நிலவும் போர்ச்சூழல், அதை நிரூபித்து நிற்கிறது. வரண்ட வளமற்ற நிலப்பகுதியாக இருந்த போதும் ஒரு வரையறையான, பண்பட்ட வாழ்வியல் இங்கு இருந்தது. இயற்கையின் சீற்றத்திற்குப் பணிந்து வாழ்ந்த மக்கள், பண்பாடு மாசுபடாமல் இருந்தது.

ஆனால் தற்போதைய போர்ச்சூழல், மக்கள பண்பாட்டு வாழ்வியலில் பாரிய பிறழ்வை ஏற்படுத்தியுள்ளது. அதன் தாக்கத்தைப் பலகோணங்களிலும் நோக்க



முடிகின்றது.

வாழ்வியல் ஒழுங்கு மாறிவிட்டது. முறை கெட்டுவிட்டது. மனிதவாக்கு மாறிவிட்டது. இல்லம் புடைபெயர்ந்து இடப்பெயர்வு என்னும் வலையில் சிக்கி மனித வாழ்வு பேரவலத்திற்கு உள்ளாகியுள்ளது. உறவுகளும் நட்புகளும் முறிந்து மனித உள்ளம் ஆறுதல் தேடி அலைகிறது. பொருள்வளம் குன்றி கொடை பெறாது, வறுமை என்னும் புதைகுழியில் வீழ்ந்து திகைக்கின்றது. எதிர்காலம் பற்றி எண்ணி நடுங்குகிறது. உள்ளத்திற்கு உறுதுணையாக நின்ற வழிபாட்டிலும் நம்பிக்கை இழந்து இறப்பை எதிர்கொள்ளக் காத்திருக்கிறது.

வடக்கின் இந்தப் பண்பாட்டு பிறழ்ச்சி அதன் வரலாற்றையே அழித்துவிடும். குந்தியிருந்த நிலத்தை விட்டு ஏதிலியாக ஏங்கி வாழும் மக்களை உடல் நோயும் பசிப்பிணியும் வாட்டுகிறது. இந்நிலை தொடருமாயின் "மனிதம்" என்னும் உயர்வான விழுமியமே உடைந்து சிதறிப்போகும்.போர்ச்சூழலால் தாயில் தூவாக்குழவி போல வாழும் மக்களை மீண்டும் சீரான வாழ்வியலுள் செலுத்த வேண்டிய கடமை ஒன்று உண்டு. அதனை விரைவாகச் செயற்படுத்த காலமும் ஏவிநிற்கிறது. மனித வாழ்வுக்கு அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள், கல்வி என்பவற்றை வழங்கித் தேறுதல் சொல்லவேண்டும்.

மக்கள் வாழ்க்கை குடும்பம் என்னும் கூட்டுறவால் கூடி சமூகமென்னும் கூட்டு வழ்வாகப் பரந்து ஊர் என்னும் பெயரால் வரையறை செய்யப்பட்டு நாடு உருவாக வழிசமைத்தது. நாட்டு மக்கள் என்ற நிலையில் உலக அரங்கில் அறிமுகமாகும் இத்தகைய பண்பட்ட அறிமுகத்தோடு சிறப்புற்றிருந்த வடக்கு வாழ் மக்கள் இன்று அவலமான வாழ்வில் அவதியுற்றுக் கிடக்கிறார்கள். தம்முடைய உள்ளத்திலே எரியும் கனலை அழைத்து நெடுமூச்செறிந்து நிற்கின்றனர். இவர்களுடைய நெஞ்சக் கனலை அணைக்க ஆவன செய்யவேண்டும்.

வடக்கு வாழ் மக்களின் தனித்துவமான வாழ்வியலும் மொழியும் பேணப்படவேண்டும். அவை அடுத்த தலைமுறையினரிடம் சிறந்த முறையில் கையளிக்கப்பட வேண்டும். கல்விச் சான்றோரும் புலமைத் திறனுடையோரும் இப் பணியினை முன்னெடுக்க வேண்டும். நம்பிக்கையற்றுக் கிடக்கும் மக்கள் உள்ளத்தில் நம்பிக்கையூட்ட வேண்டும். பேர்ர்க்காலச் சூழலால் வதைபடும் மக்களை வளமான வாழ்வியலுக்கு அழைத்துச் செல்ல ஆற்றுகை தேவை. அவர்களின் துயர் தீர்க்கும் பணியை முதற் கடமையாகக் கொண்டு செயற்பட வேண்டும். அவரவர் நிலை நின்று தொடர்புற்று மக்களை அவல வாழ்விலிருந்து மீட்கப் பணி செய்யவேண்டும். முறை மாறிச் செல்லும் வாழ்க்கையை சுட்டிக்காட்டி மீண்டும் நல்வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**


குழந்தை முதல் முதியவர் வரை திகைத்து தடுமாறி நிற்கும் வேளை இது. நழுவிப் போகும் நற்பண்புகளை உணர்த்தும் சமூக அறிவூட்டல் இன்று எமக்குத் தேவை. இப்போது அதைச் செய்யாவிட்டால் எமது இனமும் மொழியும் வரலாறும் அழிய நாமே காரணமாகிவிடுவோம். இவ்விடத்தில் பண்டைய தமிழ்ப் பாடலொன்றை நினைவூட்டுவது சாலப்பொருந்தும்

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

(புறநானூறு:187)

ஔவையார் என்னும் பெண்பாற் புலவரின் வாய்மொழிப் பாடல் இது. " நிலமே! நீ ஒன்றில் நாடேயாக, ஒன்றில் காடேயாக, ஒன்றில் பள்ளமேயாக, ஒன்றில் மேடேயாக எவ்வாறாக இருப்பினும் எவ்விடத்து நல்லவரான ஆண்மக்கள் வாழ்கின்றனரோ அவ்விடத்து நீயும் நல்லையாக இருப்பாய். இதுதவிர நீ உனக்கென்று ஒரு நலம் உடையை அல்லை" என நிலத்தை வாழ்த்துவது போல இழித்துரைக்கின்றார். அவருடைய புலமைத் திறத்தால் போர்ச் சூழலால் புகழ் குன்றிக் கிடக்கும் நிலையை, உலகத்து நிலையை எடுத்துரைக்கின்றார். இன்று வடக்கின் நிலையும் இதுவே. வாழும் மக்களின் வாழ்வு வளம்பெற யார் பணிசெய்ய வேண்டும் என ஔவையார் அன்று உரைத்தது எமக்கும் பொருந்தும்.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்ற கூற்றும் இங்கு நினைவூட்டப்பட வேண்டியது. புதிய புறநானூற்றுக் காலம் இது. சிறந்த தலைமையொன்றுதான்; அதன் நிர்வாகப் பொறுப்பே; பண்பாட்டுப் பிறழ்ச்சியை களைந்தெறிய வல்லதாகும்.



## பொடிபடும் துயரம்

தென்னை பனைகள்
சிதறுண்டு போனாலும்
என்ன அதனால்
இடிந்துபோய் உட்கார்ந்தெம்
ஏலாமை சொல்ல
இது நேரம் அல்ல: இன்று
பாலாய் நிலவு பொழிகிறது
பௌர்ணமி நாள்

மீண்டும் எமது
நிலத்தில் பனைவடலி
தோன்றி நிமிர்க
துயரம் பொடிபடுக!

மீண்டும் அண்ணாவி
முழங்கும் உடுக்கின் ஒலி
நீண்ட இரவுப்
பொழுதில் நிகழட்டும்

ஊதும் குழல் பெய்
சுருட்டி இனியிரண்டு
காதும் அமுதம்
பொழிக! கடலோரம்
ஈரமண்ணில்
இனிநாம் நடக்கலாம்
பாலாய் நிலவு
பொழிகிறது
பௌர்ணமிநாள்

**கவிஞர் சோ.பத்மநாதன்**
(தமிழர் தகவல், இதழ் 19, இலண்டன் என்ற நூலிலிருந்து)

## ஆசிரியர் குறிப்பு

இனங்களுக்கிடையேயான ஒற்றுமை பற்றி எழுந்துள்ள சிந்தனை பல வருடங்களுக்குப் பிந்தியதாயினும் அதனது தேவைப்பாடு இன்னமும் இருக்கவே செய்கின்றது. இலங்கை ஒரு நாடாக இருக்க வேண்டுமென விரும்புவோர் மூவின மக்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்ற சிந்தனையுடையவர்களாக இருக்கவேண்டும்.ஆனால் இங்குதான் முரண்நிலை ஏற்படுகின்றது. அதாவது இலங்கை இறைமையுள்ள -ஒரே அரசாட்சிக்குட்பட்ட நாடாக இருக்க வேண்டுமென விரும்புவோர் இன ஒற்றுமையை புறந்தள்ளிவிட்டனர்.

பெரும்பான்மை இனத்தின் சார்புடைய அரசியல் யாப்பும் சிறுபான்மையினத்தைத் தமது அடக்குமுறைக்குள் வைத்திருப்பதுமே. "ஒரே நாடு" என்பதை தக்க வைப்பதற்கான வழி என அவர்கள் கருதினர்.இக் கருத்தியல் ஆட்சிப் புலத்திலும்,அரசியல் யாப்பிலும் நூறு வீதமாகப் பரிணமித்தது.

எனினும் இதுபற்றி சிங்கள மக்கள் அக்கறையற்றவர்களாகவே இருந்தனர். இது ஆட்சியாளர்களின் இனவாத சிந்தனைக்கு மேலும் வலுச் சேர்க்கலாயிற்று.

துரதிர்ஷ்டவசமாக , அனைத்து இன மக்களும் சம உரிமை பெற்று வாழ வேண்டுமென்ற எண்ணப்பாட்டைக் கொண்டிருந்த பெரும்பான்மை இனம் சார்ந்த அரசியல்வாதிகள் பாராளுமன்ற வாசலுக்கே செல்ல முடியாதவர்களாக இருந்தனர்.இங்குதான் சிங்கள மக்களின் தூரநோக்கற்ற செயல் புலப்படுகின்றது.

ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை ஆட்சியமைக்கும் சந்தர்ப்பம் சிங்கள மக்களுக்குக் கிடைத்த போதிலும், அவர்கள் அரசியல்வாதிகளின் போலிப் பிரசார வலைக்குள் சிக்குண்டனர்.

அதிலிருந்து மீள்வது நாட்டைப் பிரித்துவிடுமோ என உள்ளூர ஏங்கினர்.உண்மையில் அவர்கள் ஒளியைக் கண்டு பயந்தார்கள். அந்தப் பயமே இன ஒற்றுமைக்குக் குந்தகமாக அமைந்தது. இப்போதும் அதனையே கூறவேண்டும். சிறுபான்மை இனம் சார்ந்த பயத்தை பெரும்பான்மையினத்தினர் கை விடவேண்டும். ஆட்சியில் இன, மத, மொழி என்ற பேதமைக்கு இடமில்லை என்ற முடிவுக்கும் விட்டுக்கொடுப்பிற்கும் முன்வரவேண்டும்.அந்த முடிவின் உடனடி விளைவு "இலங்கை எமது நாடு" என்ற உணர்வு எல்லோர் குருதியிலும் உறிஞ்சப்படும்.

## அன்பு வாசகர்களே!

"தரிசனம்" பற்றிய தங்களின் கருத்துக்கள், விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

அனுப்பவேண்டிய முகவரி:-

"தரிசனம்"
வலம்புரி,
இல: 3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எந்தக் காரணத்துக்காக எதிரிகளாக இருக்கின்றார்களோ அந்தக் காரணம் இருக்கும்வரைதான் அவர்களை எதிரிகளாகப் பாவிக்கவேண்டும். அதற்கு மேல் சண்டையைத் தொடர்ந்து நடத்தக் கூடாது.

-பிளேட்டோ

வலம்புரி

## சந்தேகத்தைத் தரும் இந்தியாவின் பாதுகாப்பு ஏற்பாடு

கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் விமானத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இந்தியா மிகவும் உஷார் அடைந்துள்ளது.

குறிப்பாக தமிழ் நாட்டில் "ராடர்" கருவிகளைப் பூட்டி ஏதோ உலக யுத்தம் ஆரம்பித்து விட்டதுபோல நடந்து கொள்கின்றது.

விமானத் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கைப் படையினர் உஷார் அடையாத அளவில் இந்தியப் படைகள் உஷார் நிலையில் இருப்பது எதற்காக என்ற சந்தேகம் தமிழ் மக்களை துளைத்துக் கொண்டேயிருக்கின்றது.

இலங்கையின் பாதுகாப்பில் இந்தியாவிற்கு இருக்கக் கூடிய அக்கறைப்பாடு என்ன என்பதற்கு அப்பால், இந்திய கண்டத்தின் பாதுகாப்புக்காக இலங்கையை முன்னிலைப்படுத்தும் நாடகம் நடப்பது வழமையானதொன்றே.

எனினும், கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதும் தமிழ் நாடு இராமநாதபுரத்தின் எல்லைப் புறத்தில் ராடர்கள் பூட்டப்பட்டு இந்தியப் படை உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் இந்தியா நடந்து கொள்வது இலங்கை இனப்பிரச்சினை தீர்ப்பதற்கான நடவடிக்கையாக இருக்கமாட்டாது.

இலங்கையில் கடந்த முப்பது வருடங்களாக இடம்பெற்று வரும் இனப்போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென இந்தியா விரும்புமாயின், அதனைநடைமுறைப்படுத்துவதில் இந்தியாவிற்கு பெரும் இடைஞ்சல் இருக்க முடியாது.

எனினும் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் இந்தியாவின் எண்ணக்கரு மாறுபாடானதாகவே இருக்கின்றது.

அண்டைநாடான இலங்கையில் இடம்பெறும் தாக்குதல் சம்பவங்கள் இந்தியப்பாதுகாப்பிற்கு ஆரோக்கியமானதல்ல என அந் நாடு கருதுமாயின், இலங்கை அரசு நடத்தும் தாக்குதல், விடுதலைப்புலிகள் நடத்தும் தாக்குதல் என்ற பிரிப்பு இருத்தல் கூடாது.

மாறாக இரு தரப்புமே தாக்குதலை நிறுத்த வேண்டுமென்ற கட்டளையை பிறப்பிக்க வேண்டும். இதைவிடுத்து ஒரு தரப்புத் தாக்குதல் நடத்தும் போது மட்டும் இந்தியா உஷார் அடைவது ஈழத் தமிழர்களைத் திட்டமிட்டுப் பழிவாங்குவதாகவேயிருக்கும். எனவே இலங்கை விடயத்தில் இந்தியாவுக்குத் தார்மீகப் பொறுப்பு இருக்குமாயின் இலங்கை விவகாரத்தில் தலையிட்டுச் சமாதானத்தை ஏற்படுத்த முன்வர வேண்டும்.

இதைவிடுத்து இலங்கையில் இடம்பெறும் ஒரு தரப்புத் தாக்குதலை ஊதிப்பெருக்க வைத்து சர்வதேச அரங்கில் பிழையான பார்வைக்கு களம் அமைத்துக்கொடுப்பது இந்தியாவின் அணிசாரக் கொள்கைக்கு உடன்பாடானது அல்ல.

கட்டுநாயக்கா விமானத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய விமானத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா மேற்கொண்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் அடுத்த தாக்குதல் இந்தியா மீது இடம்பெறலாம் என்ற எதிர்பார்ப்பில் இடம்பெற்றுள்ளதுபோல் தெரிகின்றது.

இந் நடவடிக்கையானது ஈழத் தமிழர்கள் மீதான இந்தியாவின் எதிர்ப்பை காட்டுவதாகவே அமையும். விடுதலைப்புலிகளிடம் விமானம் இருப்பது தென்னாசியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என இலங்கை அரசு மேற்கொண்டு வரும் பிரசாரத்திற்கு இந்தியாவின் நடவடிக்கைகளும் உதவியாக அமையும். இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வை மேலும் பின்நோக்கி நகர்த்துவதாகவே அமையும்.

எனவே இந்தியா ஈழத் தமிழர் விடயத்தில் தனக்கு ஒரு தார்மீகக் கடமை இருக்குமெனக் கருதுமாயின், இனப்பிரச்சினைத் தீர்வில் தலையிட்டு சமநிலைப்படுத்த வேண்டும்.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பி வைப்பு

(கிளிநொச்சி)

மனித நேயப் பணியாளர்களுக்கு எதிரான தாக்குதலை உடன் நிறுத்தப் பணிக்குமாறு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பிலான கடிதத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழககத்தின் தலைவர் சிவனடியார் அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இந்நாட்டில் மனித நேயப் பணி முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருவதை தாங்கள் உட்பட முழு உலகமே அறியும். காலத்திற்குக் காலம் அனர்த்தங்கள் இடம்பெறும் போதெல்லாம் மனித நேயப் பணி ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு பாதிப்புற்ற மனித உயிர்களின் அவலங்களை, இழப்புக்களை முற்றாக ஈடுசெய்ய முடியாவிட்டாலும் கூட ஒத்தடம் கொடுக்கின்ற, கைதூக்கி விடுகின்ற, முன்னேற்றத்திற்கான வழிகளைக் காட்டி நிற்கின்ற சேவையினை மனித நேய அமைப்புக்கள் வழங்கி வந்தன; வருகின்றன.

இப் பணியினைக் கடமையாகவும் தொண்டாகவும் ஏற்று இந்த மனித சேவையின் சுட்டிகளாய் பாதிக்கப்பட்டோரின் உள்ளத்தின் உருவாகும் ஆறுதலையும் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் அறுவடையாகப் பெறுவதில் திருப்தி காண்கின்ற மனித நேய அமைப்புக்களின் சுயாதீனமான, வகை சொல்லக்கூடிய, வெளிப்படையான செயற்பாடுகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து வந்த இந்தத் தேசம் இப்போது இப் பணியில் உள்ளவர்கள் பல புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

பொதுவாக உதவி செய்யும் மனப்பாங்கு என்பது தட்டிக் கொடுக்கப்பட வேண்டிய ஒன்றேயன்றி தடுத்து நிறுத்தப்படுவதற்கல்ல என்பதைத் தாங்களும் ஏற்றுக் கொள்வீர்கள். சிறிய ஒரு அபிவிருத்திக்குக் கூட பிற நாட்டு உதவிகளையே எதிர்பார்த்து நிற்கும் இலங்கைத் தீவு அங்ஙனம் பெறப்படும் நிதியின் அதி உச்சப் பயனைப் பெற வேண்டி வகையில் தனது சூழலை வைத்திருக்க வேண்டியதே யதார்த்த உண்மையாகும்.

ஆனால் அண்மைக் காலங்களில் மனித நேய அலுவலகங்கள் தாக்கப்படுவதில் இருந்து ஆரம்பித்து சுயாதீனமாகச் செய்ய விடாது தடுத்தல், உள்ளீடுகளை உரிய காலத்தில் பெறுவதைத் தாமதித்தல் போன்ற செயற்பாடுகளைப் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பதத்தின் கீழ் தொடர்ச்சியாகப் பாதுகாப்புப்படைகளும் அவர்கள் ஆதரவில்இயங்கும் குழுக்களும் மேற்படி மனித நேயப் பணி அமைப்புக்களுக்கு எதிராகப் புரிந்து வருகின்றனர்.

மனித நேயப் பணிகளில் எவர் ஈடுபட்டாலும் அவர்களுக்கான பூரண பாதுகாப்பு உட்பட சாத்தியமான ஒத்துழைப்பைத் தொடர்ச்சியாக வழங்குவதற்குரிய அறிவுறுத்தல்களையும் பணிப்புக்களையும் எல்லா மட்டத்திலான பாதுகாப்புப் பண்டியினருக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் வழங்கிபழைய சுமுகமான சூழலை மனித நேயப் பணிக் களத்திற்கு உருவாக்கித் தருவதன் மூலம் தொடர்கின்ற மனித நேயப் பணிக்கு எதிரான செயற்பாடுகளை முடிவுக்குக் கொண்டு வர உதவுமாறு மனித நேயப் பணி செய்கின்ற அமைப்புக்கள் சார்பில் தங்களை வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது. (ச-5)

# ஜனாதிபதி மகிந்தவின் ஊதுகுழலாக தமிழக முதல்வர் செயற்படுகின்றார்

## வை.கோ. குற்றச்சாட்டு



(திருச்சி)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊதுகுழலாக தமிழக முதல்வர் கருணாநிதி செயல்படுகிறார் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. குற்றம்சாட்டியுள்ளார். விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கடத்தல் வழக்கில் பண உதவி செய்ததாக அண்மையில் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க. அமைப்புச் செயலாளர் சீமா பஷீரைச் சந்தித்துப் பேசிபின் வை.கோ. இதனைத் தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள சீமா பஷீர் சட்டவிரோத நடவடிக்கை எதிலும் ஈடுபடாதவர். இவர் மீது போடப்பட்டிருப்பது பொய் வழக்கு. இதில் ஒரு சதம் கூட உண்மையில்லை. அரசியல் வஞ்சம் தீர்ப்பதற்காக மைனாரிட்டி பாசிச தி.மு.க. அரசு பொய் வழக்குப் போட்டுள்ளது. ம.தி.மு.கவை முடக்க முதல்வர் அஸ்திரம் ஏவி விட்டுள்ளார்.

இருவரை வைத்து ம.தி.மு.கவை உடைக்க முதல்வர் போட்ட திட்டம் தூள் தூளானது. தற்போது பொய் வழக்கு மூலம் அடக்கு முறை ஏவப்பட்டிருப்பதை உறுதியாக எதிர் கொண்டு வெல்வோம். இலங்கை-இந்திய கடற்படைக் கூட்டு ரோந்து யோசனையை மகிந்த ராஜபக்ஷ கூறினார். இந்த யோசனையை தமிழக முதல்வரும் கூறினார்.

இதற்கு கடும் எதிர்ப்பு வந்ததும் முதல்வர் கருணாநிதி எலி, தவளை கதை சொல்லி விளக்கம் கூறுகின்றார். ராஜபக்ஷவின் ஊதுகுழலாக தமிழக முதல்வர் கருணாநிதி செயல்படுகின்றார். இலங்கைக் கடற்படை ஊடுருவலை இந்திய கடற்படை தடுக்க வேண்டும்.

தமிழர்களின் விரோதியான இலங்கை அரசுக்கு இந்திய அரசு மறைமுகமாக உதவுகின்றது. விடுதலைப்புலிகள் முதன்முறையாக வான்வெளித் தாக்குதல் நடத்தியது தமிழ் இனத்துக்கு பெருமை தேடித்தந்த விஷயம் என வை.கோ. கூறினார். (எ-1)

# தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு இலக்கியக் கலைப் பெருவிழாப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் 2007 ஆம் வருடத்தின் தேசிய இலக்கிய கலைப்பெருவிழாவின் பொருட்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியில் என நான்கு கட்டங்களாக இலக்கிய கலைப் போட்டிகளை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்காக கட்டுரை, கவிதை, சிறுகதை ஆகிய போட்டிகளும் திறந்த இலக்கிய கலைப் போட்டிகளாக கவிதை, சிறுகதை , பாடல் எழுதும் போட்டி என்பன நடைபெறவுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைப் போட்டியாளர்கள் தத்தமது பாடசாலை அபிவிருத்தி உத்தியோகஸ்தர் அல்லது கலாசார உத்தியோகஸ்தருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தினையும் போட்டி நிபந்தனைகளையும் பெற்று அதற்கான ஆக்கங்களை எதிர் வரும் மார்ச 31 ஆம் திகதிக்கிடையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் எஸ்.சிறிநிவாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (சு)

# வெள்ளி நற்சிந்தனை 11

## நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

'மக்கள் கூடி வாழ்வது கோடி இன்பம் தரும்' என்பது எமது மூத்தோரின் நம்பிக்கையாகும். நல்லவர்களோடு சேர்ந்து பழகுவதால் ஏற்படும் நன்மையைப் பற்றி நாம் நன்குணர வேண்டும் என அவர்கள் விரும்பினர். அதற்கெனச் சிறப்பாக எம்மை வழிப்படுத்த பல பாடல்களைப் புலமைச் சான்றோர் பாடியுள்ளனர். எளிய மொழி நடையில் சிறிய பாடல் வடிவில் மக்கள் மனதில் பதிய வைக்க எண்ணிப்பாடினர். அப்பாடல்களை இன்று படிக்கும்போது ஓருண்மை புலப்படுகின்றது.

இன்று 'கல்வி கற்றல்' என்னும் செயற்பாடு 'தேர்வு' என்ற இலக்கையே நோக்காகக் கொண்டுள்ளது. மேலைத்தேய கல்வி முறைகளைப் பின்பற்றி சிறந்த உத்தியோகம் பெறும் இலக்கோடு கல்வி கற்பிக்கப்படுகின்றது. 'வாழக் கல்' என்ற முன்னோரின் அறிவுரையை யாரும் நினைப்பதில்லை. ஏட்டுக் கல்வியால் எல்லா நலன்களையும் பெற்று விடலாம் என்ற எண்ணமே நிலைபெற்றுள்ளது.

ஆனால் இன்றைய மக்களின் வாழ்வியல் கற்றபடி ஒழுக முடியாத நிலையிலுள்ளது. மனிதனின் கல்வியில் 'வழிப் படுத்தும்' பண்பு நலன் குறைந்தமையே இதற்குக் காரணமாகும். நல்லவர்களுடைய தொடர்பு ஒருவன் குண இயல்புகளைப் பண்படுத்தும். குறிப்பாக இளமைக்காலத்தில் ஒருவன் நல்ல குணங்களையுடைய பெருமையான பெரியாரைச் சார்ந்து ஒழுகிவரின் நல்லவனாக உருவாகி விடுவான். அவனுடைய சிறுமைக் குணங்கள்எல்லாம் மறைந்து விடும். இந்த மாற்றத்தை உணர்வதற்கு ஒரு உவமையை நாலடியார் எடுத்துக் காட்டியுள்ளது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பாலோடு கலந்த நீர் பாலாகவே தோன்றும். நீரின் நிறத்தைக் காட்டாது. அதுபோல சிறுமைக் குணமுள்ளவர்கள் பெருமைக் குணமுள்ள பெரியோரைச் சார்ந்து நிற்கும் போது அவர்களுடைய சிறுமைக்குணம் மறைந்துவிடும். நல்லினம் சேர்ந்து வாழ்வதால் ஏற்படும் நன்மையை பாலோடு அளாய நீருடன் ஒப்பிட்டுக் காட்டும் பாங்கு எல்லோருக்கும் நல்ல விளக்கத்தைத் தந்து நிற்கின்றது. கரைசல்களின் கலப்பையும் மாற்றத்தையும் கண்டு வியக்கும் விஞ்ஞான உலகம் இச் செய்தியையும் அறிய வேண்டும்.

'பாலோடு அளாயநீர் பாலாகும் அல்லது
நீராய் நிறந்திரிந்து தோன்றாதாம் - தேரின்
சிறியார் சிறுமையுந் தோன்றாதாம் நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து' (நாலடியார்-177)




தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கண்டனப் பேரணியில் கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம்.

# மன்னார் நோக்கி எறிகணைத் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மாளிகைப்பிட்டி, செம்மந்தீவு,கட்டுக்கரைக்குளம் போன்ற பிரதேசங்களை நோக்கியும் மற்றும் பரப்பாங்கண்டல்,முருங்கன் பகுதிகளில் உள்ள இரா்ணுவ முன்னரங்க காவல் நிலைகள் மீதும் விடுதலைப்புலிகள் நேற்று நண்பகல் மோட்டார் தாக்குதல்களை நடத்தியதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல்கள் காரணமாக மன்னார் பிரதான வீதியில் சிறிது நேரம் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டதுடன் அப் பகுதியில் பதற்றம் நிலவியதாக கூறப்படுகின்றது. (ச-3)

## யுத்தத்தின் மூலம் தீர்வுகாண...

ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

கட்டுநாயக்கா விமானப்படைத்தளம் தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு பாதுகாப்புச் செயலாளர் பதவி விலகவேண்டும் என்று கோரப்படுவது அடிப்படையற்ற தர்க்கமாகும். கோத்தபாய ராஜபக்ஷ தனியாக யுத்தம் செய்யவில்லை. அமெரிக்காவின் பென்டகன் மீதே பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்டது என்பதனை நாம் மறந்து விடக்கூடாது.

இதனை அமெரிக்கா சற்றும் எதிர்பார்க்கவில்லை. இராணுவ நடவடிக்கைகள் எனும் போது சில பலவீனங்கள் இருக்கும். அந்த குறைபாடுகளை நாம் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். புலிகளின் தாக்குதல் மூலம் ஒரு விடயம் தெளிவாகின்றது.

அதாவது, இனப்பிரச்சினையைத் தீர்க்க யுத்தத்தின் மூலம் ஒருபோதும் தீர்க்கமுடியாது என்பதனை அனைவரும் தற்போது ஏற்றுக்கொள்ளவேண்டும். பயங்கரவாதம் தோற்கடிக்கப்படவேண்டும். அதேவேளை இனப்பிரச்சினைக்கு பேச்சுமூலம் அரசியல் தீர்வுகாணப்படவேண்டும். இதுவே ஐக்கிய தேசியக்கட்சியின் மாற்றுக்குழுவின் நிலைப்பாடாகும்.

பத்திரிகைகள் ஜனாதிபதியின் செய்திகளைவிட ரணிலின் செய்திகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. ரணில் ஜனாதிபதியை விட பெரியவரா என்றார். ஐக்கிய தேசியக்கட்சி இன்று பாரிய பின்னடைவைக் கண்டு வருகின்றது. காரணம் ஜே.வி.பியினருக்கும் பாராளுமன்ற நிலையில் சட்டங்கள் குறித்து தெரியவில்லை அவர்கள் புதியவர்கள். ஒரு காலத்தில் பாராளுமன்றத்தை அழிக்க முற்பட்டவர்கள் என்பதனால் தற்போது பாராளுமன்றத்தின் சட்டத்திட்டங்கள் குறித்த அவர்களின் அறிவில்லாமையை ஏற்றுக்கொள்ளலாம்.

ஜே.வி.பியினர் தற்போதுதான் பாராளுமன்ற செயற்பாடுகள் குறித்து கற்றுவருகின்றனர் என்றார். (ச-5)

## இலங்கை...

நடத்தியதாக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.மீன்பிடித் தொழில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பகுதி இலங்கை கடல் எல்லைக்கு உட்பட்டது என்றும் இருப்பினும் எச்சரிக்கை வழங்காது துப்பாக்கிச் சூட்டினை படையினர் நடத்தியது தவறு என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் சம்பவ இடத்தில் இருவரும் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் கடலில் வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். படுகாயமடைந்த இருவர் கன்னியாகுமரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

## தேசிய வார...

மௌபிம பத்திரிகையின் ஆசிரியர் திலக் குருவிட்ட பண்டார ,இவ்விரு பத்திரிகைகளையும் பிரசுரிக்கும் ஸ்ராண்டட் நியூஸ் பேப்பர்ஸ் பிறைவேட் லிமிட்டடினுடைய வங்கிக்கணக்குகள் அரசாங்கத்தினால் சீல்வைக்கப்பட்டிருப்பதனால் எழுந்துள்ள நெருக்கடி காரணமாக தாம் அங்கு தொழில் புரியும்

## இலங்கைத்...

தனால் பெரும் கைகலப்புச்சூழல் உருவானது.


# திருமண அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விய வருடம் பங்குனித் திங்கள் 18-ம் நாள் (01.04.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.52 மணி முதல் 10.43 மணிவரையுள்ள உத்தர நட்சத்திர இடப லக்கினமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன் ஜெகன் அவர்கட்கும்

எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி சுபத்திரா அவர்கட்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில்

திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்;

திரு.திருமதி சிங்கராசா தம்பதிகள், சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.

திரு.திருமதி பொ.பாஸ்கரன் தம்பதிகள், பொன் அகம், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (பரிமளா ஸ்ரோர்ஸ்) தொ.பே.இல:222 2974

(இரு வீட்டார் அழைப்பு)

(847)


## ஒவ்வொரு குண்டு...

என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தாக்குதல் இடம் பெற்ற சிறிது நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிற்கு எழுதிய கடிதத்தில் நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் படியும், சபாநாயகர் டிபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டாரவை இது தொடர்பாக கேட்கும்படியும் எழுதியிருந்தார்.

ஆனால் லொக்கு பண்டார தற்போது நாட்டில் இல்லை. சபாநாயகருக்கு பதிலாக பிரதி சபாநாயகர் நாடாளுமன்றத்தை கூட்டலாம் என நாடாளுமன்ற பொதுச் செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகர தெரிவித்திருந்தார்.

ஆனால் நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய தேவையில்லை என ஜே.வி.பியும் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் லாபங்களை அடைய முற்பட்டுள்ளது., விடுதலைப்புலிகளுக்கு அனுகூலங்களை ஏற்படுத்தும் முகமாக இந்த கட்சியால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை யாரும் கவனத்தில் கொள்ளத் தேவையில்லை என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (ச-5)

## விமான...

தெரிவித்திருக்கின்றார்.

விமானம் ஓட்டும் பயிற்சி பாடசாலையொன்றை ஆரம்பிக்கும் நோக்கில் இவற்றை தம்வசம் வைத்துக்கொண்டதாகவும் அவர்

## வீட்டிலிருந்த...

பணத்தை துப்பாக்கிதாரிகள் திருடிச்சென்றுள்ளனர் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா பிரேதபரிசோதனைக்காக சடலங்களை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## தமிழர்...

பெற்றது.

அதில் வடக்கு- கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளார்,கிளிநொச்சி மாவட்ட அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் இ.கணேசபிள்ளை ,தமிழீழ கல்வி மேம்பாட்டுத் தலைவர் பிரான்சிஸ் யோசப் அடிகளார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.இக் கண்டனக் கூட்டத்தில்

## இலங்கைத்...

தனால் பெரும் கைகலப்புச்சூழல் உருவானது. உடனே அருகிலிருந்த உறுப்பினர்கள் இரு தரப்பினரையும் அமைதிப்படுத்த முயன்றனர். சபாநாயகர் அமளியில் ஈடுபட்டவர்களை கடுமையாக எச்சரித்தார். இது போன்ற சம்பவங்களை அனுமதிக்க முடியாது என்றும் சபாநாயகர் மேலும் கூறினார். (ச-3)

கப்பட்டிருப்பதனால் எழுந்துள்ள நெருக்கடி காரணமாக தாம் அங்கு தொழில் புரியும் பத்திரிகையாளர்கள் உட்பட பணியாளர்களிற்கு சம்பளம் வழங்குவதிலும் நாளாந்த செலவினங்களை மேற்கொள்வதிலும் ஏற்பட்ட சிக்கல்களினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (ச)

விமானம் ஓட்டும் பயிற்சி பாடசாலையொன்றை ஆரம்பிக்கும் நோக்கில் இவற்றை தம்வசம் வைத்துக்கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார். இவ் விமான உதிரிப்பாகங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள அவை விமானப் படையின் முகாமொன்றிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ச-3)

அடிகளார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். இக் கண்டனக் கூட்டத்தில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (எ-5)

## மரண அறிவித்தல்

### எஸ்.ஜே.செல்லத்துரை



*(தலைமைக்காரியாலய கிராம உத்தியோகத்தர், அதிவிசேடதரம் பிரதேசசெயலகம் யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாணம், மாட்டீன் வீதியை பிறப்பிடமாகவும் இல.45 றக்கா லேன், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்.ஜே. செல்லத்துரை அவர்கள் 29.03.2007 வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்,
மனைவி;மங்களேஸ்வரி செல்லத்துரை
முகாமைத்துவ உதவியாளர்,
கல்வித்திணைக்களம், யாழ்.வலயம்,
யாழ்.மாநகரசபை, முன்னாள் உத்தியோகத்தர்.

(790)

## கடற்படையின் 23...

முல்லைத்தீவுக்கும் அலம்பிலுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் படையினரின் 23 டோராப் படகுகளைக் கொண்ட அணி கடற் பரப்பில் முன்னோக்கி வந்தன.

முன்னோக்கி வந்த டோராப் படகுகளின் அணிக்கு எதிராக கடற்புலிகள் நடத்திய முறி யடிப்புத் தாக்குதல் நேற்று அதிகாலை ஒரு மணிவரை நீடித்தது. கடற்புலிகளின் தீவிர முறியடிப்புத் தாக்குதலில் இரு டோரா பீரங்கிப் படகுகள் கடுமையாக சேதமடைந் துள்ளன.

இதனையடுத்து கடற்படையினரின் ஏனைய் டோராப் படகுகள் சேதமடைந்த பட குகளை இழுத்துக்கொண்டு பின்வாங்கி ஓடின என புலிகளின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம் முறியடிப்புச் சமரில் கடற்புலிகளின் போராளி ஒருவர் வீரச் சாவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## முல்லைத்தீவுக் கடற்பரப்பில்...

நேற்று முன்தினம் இரவு ரோந்து சென்று கொண்டிருந்த கடற்படையினர் மீது கடற்புலிகளின் படகுகள் தாக்குதல் நடத்தின. இதனையடுத்து கடற்படையினரும் பதில் தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதல் சுமார் நான்கு மணி நேரம் நீடித்தது.

நீண்ட சமரின் பின்னர் கடற்படையினரின் அதிவேகப் படகுகள் கடற்புலிகளின் மூன்று படகுகளை நிர்மூலமாக்கின. இப்படகுகளில் இருந்த கடற்புலி உறுப்பினர்களும் இதன் போது கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அப் படகுகளில் சுமார் 12 முதல் 15 வரையான கடற்புலிகள் இருந்திருக்கலாம் எனவும் நம் பப்படுகின்றது. இத் தாக்குதலில் ஒரு கடற்படை வீரர் காயமடைந்துள்ளதாக அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-5)

## பெற்றோலின்...

இதன் அடிப்படையில் புதிய விலை 104 ரூபாவாகும். இதேவேளை ஒக்ரன் 95 ரக பெற்றோலின் விலையும் 7 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் புதிய விலை 107 ரூபாவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என பெற்றோலியக் கூட்டுஸ்தாபனம் அறிவித்துள்ளது (எ-1)

## பளை...

ளதாக தெரிவிக்கப்பட்ட து. இத் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே ஒருவர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)






இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.